4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 411 /2020 நாள்: 07.04.2026 வா.சா.1 – ராமராஜ்**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்காக எனது மனைவி கடந்த 28.07.2016 ஒரு கிரைய ஒப்பந்தம் பிரதிவாதியுடன் ஏற்படுத்தி உள்ளார் அந்த கிரைய ஒப்பந்தத்தில் தாவா சொத்தினுடைய விலை ரூ.2,40,52,875/– என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்ததில் முன் தொகையாக ரூ.40 லட்சம் நாங்கள் பிரதிவாதிக்கு கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் காலக்கெடு 3மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி 6 மாதம் என்று கூறுகிறார். மேலும் மேற்படி கிரைய உடன்படிக்கையில் ஒப்பந்தக் காலகெடுவிற்குள் கிரையம் முடிக்கவில்லை என்றால் கிரைய முன் தொகையை இழந்து விட வேண்டியது என்று வாசகம் உள்ளது என்று சொன்னால் சரிதான். என்ன காரணத்திற்காக எனது மனைவி குறிப்பிட்ட காலகெடுவிற்குள் கிரையம் முடிக்க முன் வரவில்லை என்றால் சாட்சி தாவா சொத்தை அளந்து பிரதிவாதி தரவில்லை அதனால் கிரையம் முடிக்க முடியவில்லை என்றும் கூறுகிறார். தாவா சொத்தை அளந்து தர வேண்டும் என்று பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் நாங்கள் அனுப்பவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் 3 மாத காலக்கெடு தான் குறிப்பிடப்பட்டுள்ளது, நான் சொல்லுவது போல் 6 மாத காலக்கெடு குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 12.06.2017 அன்று தாவா சொத்து சம்பந்தமாக நானும் பிரதிவாதியும், ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம் என்று

சொன்னால் சரிதான். எனது மனைவியுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்படி கிரையத்தை முடிக்க வேண்டும் என்று பிரதிவாதி கடந்த 27.10.2016ல் எனது மனைவிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு எனது மனைவி தாவா சொத்தை பிரதிவாதி அளந்து தரவில்லை என்று, அதனால் கிரையம் முடிக்கவில்லை என்று பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. 12.06.2017 அன்று எனது மனைவி பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, அதே தேதியன்று தாவா சொத்து சம்பந்தமாக நான் ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரிதான். 2வது கிரைய ஒப்பந்த அடிப்படையில் நான் கூடுதலாக நான் பிரதிவாதிக்கு ரூ.30 லட்சம் கொடுத்தேன். நானும், பிரதிவாதியும் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் கிரையத்திற்கான காலக்கெடு 3 மாதம் என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். நான் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடுவிற்குள் கிரையத்தை முடிக்கவில்லை என்றால் முன்தொகையை இழந்துவிட வேண்டும் என்று வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்படி கிரையம் முடிக்காமல் 2வது கிரைய ஒப்பந்தத்தை நான் எதற்கு பிரதிவாதியுடன் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சாட்சி பிரதிவாதி திரும்ப தாவா சொத்தை அளந்து தருவதாக சொன்னதால் மீண்டும் நான் கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்று கூறுகிறார். நானும் எனது மனைவியும் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி தாவா சொத்தை அளந்து அத்து செய்து தர வேண்டும் என்று நிபந்தனை எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் மேற்கண்ட அளந்து பிரதிவாதி அத்து பார்த்து தரவேண்டிய விவரத்தை இந்த வழக்கில் தற்போது தான் கூறுகிறேன் என்றும், எனவே மேற்படி வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி மகன் விமலாதித்தனை எனக்கு தெரியும். மேற்படி விமலாதித்தனுடன் நான் கடந்த 12.06.2017 அன்று வேறொரு சொத்தை

பொறுத்து கிரைய ஒப்பந்தம் எதுவும் நான் தயார் செய்யவில்லை. கிரைய ஒப்பந்த ஆவணம் எழுதப்பட்ட பிறகு தான் முன்தொகையை பொதுவாக கொடுப்போம் என்று சொன்னால் சாட்சி ஒரே சமயத்தில் கிரைய ஒப்பந்தமும், முன்தொகையும் எழுதி கொடுப்போம் என்று சாட்சி கூறுகிறார். 04.05.2016 அன்று நான் பிரதிவாதிக்கு முன்தொகையாக ரூ.5 லட்சம் கொடுத்ததாக வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தேதியில் நானோ, எனது மனைவியோ பிரதிவாதியுடன் கிரைய ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரிதான். 2வது கிரைய ஒப்பந்தத்தை நான் ஏற்படுத்திய பிறகு மீத தொகையை செலுத்தி கிரையத்தை முடித்து கொள்ள வேண்டும் என்று பிரதிவாதி எனக்கு 06.11.2017 அன்று ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை பெற்று கொண்ட பிறகு பாக்கி தொகையை செலுத்தி கிரையம் முடிக்க தயாராக இல்லை என்றால் சாட்சி பிரதிவாதி தாவா சொத்தை அளந்து தரவில்லை என்று கூறுகிறார். நான் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி தாவா சொத்தை அளந்து தர வேண்டும் என்று வாசகம் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது மனைவி பிரதிவாதியுடன் ஏற்படுத்தி கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் ஏற்கனவே ரூ.5 லட்சம் முன்தொகையாக பிரதிவாதிக்கு கொடுத்த விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ரூ.5 லட்சம் பிரதிவாதியின் மகன் விமலாதித்தன் என்பவருடன் நான் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்திற்கான முன்தொகை என்றால் சரியல்ல. பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பிற்கு 1 வருடம் கழித்து 02.01.2019 ல் பதிலறிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். நானும், எனது மனைவியும் பிரதிவாதியிடம் கொடுத்த முன்தொகையை பல்வேறு தவணைகளில் பெற்றுக் கொண்ட காரணத்தினால்தான் 1வருடமாக எவ்வித பதிலறிப்பும் நான் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தக் காலக்கெடு முடிவடைந்த

பிறகு, 3 வருடத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்யாத காரணத்தினால் கால வரையறை சட்டத்தால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 12.06.2017ல் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்த ரத்து ஆவணத்தில் எனது மனைவி தாவா சொத்தை கிரைய முடிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக தாவா சொத்தை பிரதிவாதி அளந்து தர முன்வரவில்லை என்று பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் மண் அடித்து மேம்படுத்த எனக்கு அனுமதி இருப்பதாக கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை என் கைவசம் தராத போது அதில் மண் கொட்டி மேம்படுத்த வேண்டி அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்று தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள மாற்றுதல் பரிகாரம் மற்றும் பற்றுகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. பொய்யான விவரங்களை குறிப்பிட்டு வழக்கு நான் தாக்கல் செய்த காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.07 17:41:00 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.